EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# ரூ.2000 நோட்டுகளை திரும்பப் பெறுவதால் சாமானியருக்கு பாதிப்பு இல்லை: பொதுமக்கள், வணிகர் சங்கம் உள்ளிட்டோர் கருத்து



**சென்னை:** நாடு முழுவதும் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்படும் என்றும், பொதுமக்கள் செப்டம்பர் 30-க்குள் வங்கியில் மாற்றிக் கொள்ளலாம் என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.| இதுகுறித்து பல்வேறு தரப்பினர் தெரிவித்த கருத்துகள் வருமாறு:

**எம்.தியாகராஜன் (தலைவர், கோயம்பேடு மலர், காய், கனி, வியாபாரிகள் நலச்சங்கம்):** நாங்கள் ரூ.1 லட்சத்துக்கு வியாபாரம் செய்தால், அதில் எப்போதாவது ஒன்றிரண்டு நோட்டுகள் மட்டும்தான் ரூ.2000 ஆக வருகிறது. காய்கறி கடைகளுக்கு வரும் சாமானிய மக்கள் யாரும் ரூ.2000 நோட்டை கொண்டு வருவதே இல்லை. அதனால் இந்த அறிவிப்பு பணத்தை பதுக்குபவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும். **நடுத்தர மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை.**

**ஜே.ராபர்ட் (பொதுச்செயலாளர் இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கம்):** ரூ.2000 நோட்டு அறிமுகமான போதே இது பதுக்கலுக்கு வழிவகுக்கும் என்றே தெரிவித்தோம். அதன்படி ரூ.2000 நோட்டுகள்

தற்போது பெருமளவில் முதலாளிகள் வசமே உள்ளன. அந்த நோட்டை பார்த்தே நீண்டகாலமாகிவிட்டது. இந்த அறிவிப்பின் மூலம் பதுக்கப்பட்ட ரூ.2000 நோட்டுகள் வெளியே வந்துவிடும். இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது.

**மனீஷ் (ஐடி ஊழியர்):** எங்களைப் போன்ற நடுத்தர வகுப்பினர் பெரும்பாலும் ரூ.2000 நோட்டை வைத்து கொண்டு சில்லரைக்கு அலைய வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. அதனால் ரூ.2000 நோட்டுகளாக பணத்தை சேமித்து வைப்பதே இல்லை. எனவே தற்போது ரிசர்வ் வங்கி, அந்த நோட்டுகளை திரும்பப் பெறும் முடிவால் நடுத்தர மக்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

**மேலும் அவகாசம் வேண்டும்**

**ஏ.எம்.விக்கிரமராஜா (தலைவர், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு):** மதிப்பு அதிகம் உள்ள நோட்டுகளை புழக்கத்தில் விட்டால் அதை பதுக்குவார்கள் என்று கூறித்தான் ரூ.500, ரூ.1000 நோட்டுகளை செல்லாது என அறிவித்தார்கள். அப்போதே, ரூ.2 ஆயிரம் நோட்டுகளை அச்சிட்டால் என்ன விளைவு ஏற்படும் என வல்லுநர்களை நியமித்து மத்திய அரசு ஆய்வு செய்திருக்க வேண்டும்.முன்பு உயர் மதிப்பு ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தபோது, ஏழை மக்கள் தங்கள் சேமிப்பு பணத்தை வணிகர்களிடம் கொடுத்து தான் மாற்றினார்கள். இதனால் வணிகர்களும் வருமானவரித்துறை விசாரணைக்கு உள்ளானார்கள். ரூ.2 ஆயிரம் நோட்டுகளை திரும்பப் பெறும் முடிவை நாங்கள் எதிர்க்கவில்லை. அதை மாற்றுவதற்கு மேலும் 3 மாதங்கள் அவகாசம் அளிக்க கோருகிறோம்.

**கே.பாலன் (பொதுச்செயலாளர், பாரதிய மஸ்தூர் சங்கப் பேரவை):** ஏழை மக்களிடமோ, ஏடிஎம்மிலோ எங்குமே ரூ.2 ஆயிரம்நோட்டு புழக்கத்தில் இல்லை. அந்தபணத்தை திரும்பப் பெறுவதால் சாமானியனுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. அரசியல்வாதிகள் தான் அதனை பதுக்கி வைத்துள்ளனர். இந்த

அறிவிப்பு அவர்களைத்தான் அச்சத்துக்கு உள்ளாக்கும். ரிசர்வ் வங்கியின் இந்த அறிவிப்பால் பதுக்கி வைக்கப்பட்ட கருப்பு பணம் வெளியில் வரும். அதனால் இந்த அறிவிப்பை வரவேற்கிறேன்.

**சி.பி.கிருஷ்ணன் (அகில இந்திய இணைச் செயலாளர், இந்திய வங்கி ஊழியர் சம்மேளனம்):** பணமதிப்பு நீக்க நடவடிக்கை கொண்டு வந்த போது உயர்மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளை அகற்றுவதாகக் கூறி விட்டு, பின்னர் ரூ.2 ஆயிரம் மதிப்புள்ள நோட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டதே நகை முரணாக இருந்தது. ரூ.2000 நோட்டுகளை திரும்பப் பெறுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதே சமயம் மீண்டும் ஆயிரம் ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

**டி.நிக்சன் (உயர் நீதிமன்ற வழக்கறிஞர்):** ரூ.2 ஆயிரம் நோட்டுகள் ஏற்கெனவே புழக்கத்தில் அதிகமாக இல்லை. ஏடிஎம்களிலும் கூட ரூ. 2ஆயிரம் நோட்டுகள் வருவது கிடையாது. ரூ. 2 ஆயிரம் நோட்டுகளை முடக்குவதால் ஏழை, சாமானிய மக்களுக்கு எந்தவொரு பாதிப்பும் கிடையாது. மத்திய அரசின் இந்த முடிவு நிச்சயமாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும். அதிகளவில் கருப்பு பணத்தை பதுக்கி வைத்திருப்பவர்களுக்குத்தான் இது சிக்கலை ஏற்படுத்தும்.

**நவீன் (தினக்கூலி தொழிலாளர்):** ரூ.2,000 திரும்ப பெறப்படும் அறிவிப்பு வரவேற்கத்தக்கது. எங்களை போன்ற சாதாரண மக்களிடம் பெரிய அளவில் அந்தப்பணம் புழக்கத்தில் இல்லை. எனவே இந்த பணத்தை மாற்றிவிட்டு, மீண்டும் ஆயிரம் ரூபாயை கொண்டு வர வேண்டும்.

**செ.நா.ஜனார்த்தனன் (மாநிலத்தலைவர், தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர் கழகம்):** இந்திய அரசு சரியாக திட்டமிடாமல் நவம்பர் 2016-ல் அறிமுகம் செய்த இந்த நோட்டுகள் தற்போது திரும்பப் பெறப்படும் என்பது அதிர்ச்சி

EVA STALIN IAS ACADEMY

அளிக்கிறது. மேலும் எப்போது எந்த நோட்டுகள் திரும்பப் பெறப்படுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்படும்.

**மருத்துவர் மு.அகிலன்:** முறைகேடாக பணம் சம்பாதித்து, அந்தபணத்தை பதுக்கி வைத்திருப்பவர்களுக்கு தான் பெரிய பாதிப்பு ஏற்படும். குறுகிய காலத்தில் ரூ.2 ஆயிரம் நோட்டுகளை திரும்பப்பெறுவதற்கு டிஜிட்டல் பண பரிவர்த்தனையை ஊக்குவிப்பதற்காக இருக்கலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# கருப்பை நீக்க அறுவை சிகிச்சை விவரம் தர மத்திய அரசு அறிவுறுத்தல்



**சென்னை**: அனைத்து மாநில அரசுகளுக்கு மத்திய சுகாதாரத்துறைச் செயலாளர் ராஜேஷ் பூஷண் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: சில மருத்துவமனைகளில் தேவையின்றி கருப்பை நீக்கஅறுவை சிகிச்சை மேற்கொள்ளும் விவகாரத்தை மத்திய சுகாதாரத் துறை கண்காணித்து வருகிறது.

ஏற்கெனவே அனுப்பிவைக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி, மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட கருப்பை நீக்க சிகிச்சைகளின் நிலவர விவரங்களை அளிக்க வேண்டும்.

பேறுகால மரணங்கள் குறித்துஆய்வு செய்யும் நடைமுறைஅரசு, தனியார் மருத்துவமனைகளில் ஏற்கெனவே அமலில் இருப்பதைப் போன்று கருப்பை நீக்க அறுவை சிகிச்சை குறித்தும் தனித்தனியே ஆய்வு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தூத்துக்குடி, தஞ்சை, சேலத்தில் மினி டைடல் பூங்காக்களுக்கு அடிக்கல் நாட்டினார் முதல்வர் ஸ்டாலின்




**சென்னை**: தமிழகத்தின் பல்வேறு இடங்களில்,ரூ.1,859 கோடியில் நிறுவப்பட்டுள்ள 16 புதிய துணை மின்நிலையங்களைத் திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், தூத்துக்குடி உள்ளிட்ட 3 மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு அடிக்கல்லும் நாட்டினார்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: சென்னை – புளியந்தோப்பு, தூத்துக்குடி - ஒட்டப்பிடாரத்தில் ரூ.1,718.95 கோடி செலவில் 2 புதிய 400 கிவோ துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதுதவிர, அரியலூர் - நடுவலூர், செங்கல்பட்டு -

படூர், கிருஷ்ணகிரி - பெண்ணேஸ்வரமடம், மதுரை - தனியாமங்கலம், நீலகிரி – மலர்பெட்டு; சேலம் – நத்தக்கரை, திருவள்ளூர் – அரசூர் ஆகிய இடங்களில் ரூ.94.20 கோடியில் 7 புதிய 110 கிவோ துணை மின்நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மேலும், செங்கல்பட்டு - புதுப்பாக்கம், சென்னை - ஆழ்வார்திருநகர், காஞ்சிபுரம் - மாத்தூர், புதுக்கோட்டை - நகரப்பட்டி, திருவள்ளூர் - திருமலைவாசன் நகர், திருவாரூர்- அடியக்கமங்கலம், எடமேலையூர் ஆகிய இடங்களில் ரூ.45.97 கோடியில் 7 புதிய 33/11 கி.வோ துணை மின்நிலையங்கள் என ரூ.1,859.12 கோடியில் நிறுவப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களை நேற்று காணொலி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

இதுதவிர, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாமக்கல், புதுக்கோட்டை, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தென்காசி, தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 65 துணைமின் நிலையங்களில் ரூ.143.88 கோடி மதிப்பில் 67 மின் மாற்றிகளின் திறனை கூடுதலாக 853 எம்.வி.ஏ அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவற்றின் செயல்பாட்டையும் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் வி.செந்தில்பாலாஜி, டி.ஆர்.பி.ராஜா, தலைமைச்செயலர் வெ.இறையன்பு, எரிசக்தித் துறை செயலர் ரமேஷ் சந்த் மீனா, மின்வாரிய தலைவர் ராஜேஷ் லக்கானி, தொடரமைப்புக்கழக மேலாண் இயக்குநர் ஆர்.மணிவண்ணன், மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகத்தின் இயக்குநர் மா.சிவலிங்கராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

EVA STALIN IAS ACADEMY

**3 மாவட்டங்களில் டைடல் பூங்கா:** தமிழகத்தில் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், தற்போது 2 மற்றும் 3 -ம் நிலைநகரங்களில், 50 ஆயிரம் சதுர அடி முதல் ஒரு லட்சம் சதுரடி பரப்பில் 7 மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இப்பூங்காக்கள் மூலம் தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்கள் மற்றும் அவற்றின் சுற்றுவட்டார பகுதிகளில் வசித்துவரும் ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டங்களிலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

# வக் ஷீர் நீர்மூழ்கி கப்பலின் பரிசோதனை தொடக்கம்



**மும்பை:** சீனா தனது நாட்டின் கடற்படையை வலுப்படுத்தி வருகிறது. இந்திய பெருங்கடல் பகுதியில் சீன கடற்படை கப்பல்களின் போக்குவரத்தும் தற்போது அதிகரித்துள்ளது. இதனால் இந்திய கடற்படையில் உள்ள போர்க் கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

'புராஜெக்ட்-75' திட்டத்தின் கீழ் பிரான்ஸ் கடற்படை குழுமத்துடன் இணைந்து 6 கல்வாரி ரக நீர்மூழ்கி கப்பல்களை இந்தியாவில் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. கல்வாரி ரக நீர் மூழ்கி கப்பலில் இருந்து டார்பிடோ உட்படபல வகையான ஏவுகணைகளை ஏவ முடியும். இந்த நீர்மூழ்கி கப்பல்கள் மும்பையில் உள்ள மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்தில் (எம்டிஎல்) தயாரிக்கப்படுகின்றன.

இங்கு தயாரிக்கப்பட்ட 5 கல்வாரி ரக நீர்மூழ்கி கப்பல்கள் இந்திய கடற்படையில் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளன. தற்போது 6-வது கல்வாரி ரக நீர்மூழ்கி கப்பல் தயாரிக்கப்பட்டு பரிசோதனைக்காக நேற்று கடலில் இறக்கப்பட்டது. இதற்கு வக் ஷீர் என பெயரிடப்பட்டுள்ளது. இன்ஜின், ஆயுதங்கள், சென்சார்கள் ஆகியவை கடல் பயணத்தின் போது பரிசோதிக்கப்படும்.

பரிசோதனையை முடித்தபின், இந்த நீர்மூழ்கி கப்பல் கடற்படையில் அடுத்தாண்டு தொடக்கத்தில் சேர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கப்பல் தற்சார்பு இந்தியா திட்டத்துக்கு ஊக்குவிப்பாக உள்ளது என இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

# ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்க ஜப்பான் சென்றார் பிரதமர் மோடி: ஹிரோஷிமாவில் உற்சாக வரவேற்பு



**புதுடெல்லி**: ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பானின் ஹிரோஷிமாவுக்கு சென்றுள்ளார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

வளர்ந்த நாடுகளை உள்ளடக்கிய ஜி-7 கூட்டமைப்பின் வருடாந்திர உச்சி மாநாடு, ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் நேற்று தொடங்கியது. இந்த மாநாடு வரும் 21-ம் தேதி வரை நடக்க உள்ளது. இதில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்க, இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி நேற்று டெல்லியில் இருந்து ஜப்பானுக்கு புறப்பட்டுச் சென்றார். ஹிரோஷிமாவில் அவரை ஜப்பான் பிரதிநிதிகள் வரவேற்றனர். உணவு, உரம், எரிசக்தி பாதுகாப்பு உட்பட உலகம் எதிர்கொண்டுள்ள பல்வேறு சவால்கள் குறித்து இந்த மாநாட்டில் பிரதமர் மோடி உரையாற்ற உள்ளார்.

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ‘குவாட்’ அமைப்பின் உச்சி மாநாடு, ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இருந்து ஜப்பானின் ஹிரோஷிமாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, ஆஸி. பிரதமர் ஆன்டனி அல்பானீஸ் ஆகியோருடன் பிரதமர் மோடியும் பங்கேற்கிறார்.

இதற்கிடையே, பிரதமர் மோடி வரும் 22-ம் தேதி பப்புவா நியூ கினிக்கு செல்கிறார். அங்கு இந்திய - பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் (எஃப்ஐபிஐசி) 3-வது உச்சி மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

பிரதமர் மோடி தனது ட்விட்டர் பதிவில், ‘ஜி-20 அமைப்பின் தலைமை பதவியை இந்தியா வகித்து வரும் இந்த நேரத்தில் ஜி-7 உச்சி மாநாட்டில் நான் கலந்துகொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. பப்புவா நியூ கினியில் நடைபெறும் எஃப்ஐபிஐசி உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்கான அழைப்பை 14 பசிபிக் தீவு நாடுகளும் ஏற்றுக்கொண்டதற்கு நன்றி’ என்று தெரிவித்துள்ளார்.

# ரூ.2000 நோட்டுகள் திரும்ப பெறப்படும் - இந்திய ரிசர்வ் வங்கி அறிவிப்பு | முழு விவரம்




**புதுடெல்லி**: இந்திய ரிசர்வ் வங்கி ரூ.2000 நோட்டுகளை புழக்கத்தில் இருந்து நீக்க முடிவு செய்துள்ளது. இதையடுத்து, மக்கள் தங்கள் கைவசம் உள்ள ரூ.2000 நோட்டுகளை மே 23-ம்தேதி முதல் வங்கிகள் மூலமாக மாற்றிக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு செப்.30-ம் தேதி வரை அவகாசம் தரப்பட்டுள்ளது. அனைத்து ரூ.2000 நோட்டுகளையும் புழக்கத்தில் இருந்து அகற்ற ரிசர்வ் வங்கி முடிவெடுத்துள்ள நிலையில்வங்கிகள் அந்த நோட்டுகளை பொதுமக்களுக்கு விநியோகிக்க கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ரூ.2000 நோட்டுகளை திரும்ப பெறுவது தொடர்பாக இந்திய ரிசர்வ் வங்கி நேற்று வெளியிட்ட அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 2016-ம் ஆண்டு நவ.8-ம் தேதி ரிசர்வ் வங்கியின் வாரியக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், அப்போது புழக்கத்தில் இருந்த ரூ.500, ரூ.1000 நோட்டுகள் திரும்ப பெறப்பட்டன. அதற்கு மாற்றாக, பொருளாதாரத்தில் கரன்சிகளுக்கான தேவையை

நிறைவுசெய்யும் வகையில் புதிதாக முதன்முதலில் ரூ.2000 நோட்டுகள் 2016 நவ.2-ம் தேதி அறிமுகம் செய்யப்பட்டன. ரிசர்வ் வங்கி சட்டம் 24(1) பிரிவின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதாரத்தில் இதர மதிப்புகளில் கரன்சி நோட்டுகள் போதுமான அளவில் இருப்பதை உறுதி செய்வதற்காகவே ரூ.2000 நோட்டுகள் அப்போது வெளியிடப்பட்டன.

**அச்சிடுவது நிறுத்தம்:** இந்த நிலையில், கடந்த 2018-19-ம் ஆண்டு முதல் ரூ.2000 நோட்டுகளை அச்சிடுவது முழுவதுமாக நிறுத்தப்பட்டுவிட்டது. தற்போது புழக்கத்தில் உள்ள 89 சதவீத ரூ.2000 நோட்டுகள் கடந்த 2017 மார்ச் மாதத்துக்கு முன்பாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டவை ஆகும்.

எனவே, பொதுவெளியில் ரூ.2000 நோட்டுகளின் புழக்கம் என்பது தற்போதைய நிலையில் பெருமளவு குறைந்துவிட்டது.

**குறைந்துபோன புழக்கம்:** அதன்படி, உச்சபட்சமாக கடந்த 2018 மார்ச் 31-ம் தேதி ரூ.6.73 லட்சம்கோடி மதிப்புக்கு புழக்கத்தில் இருந்த ரூ.2000 நோட்டுகள் ரூ.3.62 லட்சம் கோடியாக குறைந்துவிட்டது. இது, மொத்த பணப் புழக்கத்தில் 10.8 சதவீதம் மட்டுமே.

இந்த நிலையில், கரன்சி புழக்கத்தின் தேவையை நிறைவு செய்ய இதர மதிப்புடைய கரன்சி நோட்டுகளே போதும் என்பதால் ரூ.2000 நோட்டுகளை திரும்ப பெறும் முடிவுக்கு ரிசர்வ் வங்கி தற்போது வந்துள்ளது. 'கிளீன் நோட் பாலிசி' என்ற அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

**தொடர்ந்து செல்லுபடியாகும்:** ரூ.2000 நோட்டுகளை திரும்ப பெறும் அறிவிப்பு வெளியிடப்பட்டாலும், சட்டப்பூர்வ அடிப்படையில் அந்தநோட்டுகள் தொடர்ந்து செல்லுபடியாகும்.

EVA STALIN IAS ACADEMY

**4 மாதங்களுக்கு மேல் அவகாசம்:** பொதுமக்கள் தங்களிடம் உள்ள ரூ.2000 நோட்டுகளை மே 23-ம்தேதி முதல் வங்கிகளில் இதர மதிப்புடைய கரன்சிகளாக மாற்றிக் கொள்ளலாம். இதற்கு செப்.30-ம் தேதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கான சிறப்பு ஏற்பாடுகளை செய்ய வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வங்கிகளில் கூட்டம் கூடுவதை தடுக்கவும், வழக்கமான பணிகளைஅவர்கள் மேற்கொள்ள வசதியாகவும் ரூ.2000 நோட்டுகளை மாற்றிக்கொள்ள வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வங்கிகளில் நாள் ஒன்றுக்கு ரூ.20,000 மதிப்பிலானநோட்டுகளை மட்டுமே தனிநபர் ஒருவர் மாற்றிக் கொள்ள முடியும். இதுதொடர்பாக, அனைத்து வங்கிகளுக்கும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

வங்கிகள் மட்டுமின்றி, ரிசர்வ்வங்கியின் 19 மண்டல அலுவலகங்களிலும் ரூ.2000 நோட்டுகளை வரும் செவ்வாய்க்கிழமை (மே 23) முதல் மாற்றிக்கொள்ள சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**இனி புழக்கத்தில் விடக்கூடாது:** அனைத்து ரூ.2000 நோட்டுகளையும் புழக்கத்தில் இருந்து அகற்ற ரிசர்வ் வங்கி முடிவெடுத்துள்ள நிலையில்வங்கிகள் அந்த நோட்டுகளை பொதுமக்களுக்கு விநியோகிக்க கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தஉத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது.

இவ்வாறு ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வங்கி ஊழியர் சங்க கூட்டமைப்புகள் வரவேற்பு:** ரூ.2000 நோட்டை திரும்ப பெறும் முடிவுக்கு வங்கி ஊழியர் சங்ககூட்டமைப்புகள் வரவேற்பு தெரிவித்துள்ளன. 'ரூ.2000 நோட்டுகளை அச்சிடுவது ஏற்கெனவே நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே, அவற்றை புழக்கத்தில்

EVA STALIN IAS ACADEMY

இருந்து அகற்றும் ரிசர்வ் வங்கியின் முடிவு சிறந்த நடவடிக்கை. இது மிகவும் வரவேற்கத்தக்கது' என்று கூட்டமைப்புகள் தெரிவித்துள்ளன. ரூ.2000 நோட்டு திரும்ப பெறப்படுவதாக அறிவிப்புவெளியானதை அடுத்து, பலரும் அதுபற்றிய தகவல்களை அணுகியதால் ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) இணையதளம் நேற்று முடங்கியது.

## CLEAN NOTE POLICY

- Clean Note Policy was introduced **to eliminate black money**. The policy states that all **currency notes must be clean and fresh**, meaning there should be no torn notes or writings on them.

**Introduction:**

**What is Clean Note Policy?**

- The Reserve Bank of India introduced the clean note policy in 1988. This policy was introduced to curb the circulation of counterfeit notes in the country. This policy has had an incredible impact on the Indian economy as it has forced people to deposit their old notes and withdraw new notes. Due to this, there has been shortage of money in the market and many sectors like real estate, retail trade and tourism have been affected.
- RBI Clean Note Policy has effectively reduced the circulation of counterfeit notes in India. However, it has been criticized for its negative impact on poor and rural people who do not have easy access to clean notes.

**How does the clean reference policy work?**

- The Clean Note Policy is an initiative by the Reserve Bank of India (RBI) to keep currency notes clean and usable.

EVA STALIN IAS ACADEMY

- Section 27 of the RBI Act 1934 states, "No person shall soil, mutilate, mutilate or destroy any currency note on any premises where currency notes are kept or handled."
- The clean note policy aims to keep currency notes in circulation clean and usable. It was first introduced in 1996 and revised in 2003.
- The RBI has been issuing guidelines to banks to implement the policy. Banks have been instructed to use a three-tier system to sort three types of notes: soiled notes, which can be used to make paper pulp; Dirty notes are used to make paper products of low quality; and appropriate notes, which are used to produce high-quality paper products.

**What makes it different from previous clean note policies?**

- The new clean note policy is part of RBI's efforts to make digital transactions safer.
- The Reserve Bank of India (RBI) has unveiled a new clean note policy as part of its efforts to make digital transactions safer. The new clean note policy was announced in a recent meeting with all stakeholders.
- The new clean note policy will come into effect from October 1, 2018 and will be effective from the date the customer makes payment for purchases or withdrawals at any bank branch or ATM through debit card, credit card or net banking. Convenience.

**How will RBI Clean Note policy affect India's economy?**

- The Government of India has taken a stance on monetary transactions and is implementing a new policy to reduce the amount of money in circulation. This will bring some significant changes in India's operations.
- RBI has implemented a new policy to prevent people from using cash transactions. RBI Clean Note Policy was introduced on March 1, 2017.
- This policy will be a significant step towards making India a cashless society, where digital payments will be prioritized over cash transactions. This will have an economic impact on the country as it promotes digital transactions, which will mean less demand for physical money. The purpose of this policy is to ensure that holders

EVA STALIN IAS ACADEMY

of genuine currency deposit it and get back a clean note. This will also help prevent dirty messages from entering the system and spreading across India. The Reserve Bank of India has issued a new notification with the inset lettering 'RBI' at the center of the face value. This is done to ensure that the notes received through the banks are genuine.

**Impact of clean reference policy on regional economies**

- Implementation of this clean note policy may lead to a slowdown in economic growth and may also cause inflation. The Reserve Bank of India (RBI) has been trying to control the money in circulation for some time now. In November 2016, it scrapped the Rs 500 and Rs 1,000 notes from circulation - leading to a slowdown in economic growth. Now, with the introduction of this clean note policy, there will be an even more significant slowdown in economic growth and an increase in inflation. In the short term, this policy may bring some benefits to the government in terms of increasing tax collection. However, this will affect economic growth in the long run and cause inflation.

**Conclusion**

- Black money RBI's clean note policy was introduced to curb the shadow economy. This practice was introduced to reduce fake currency notes in the system and increase transparency.
- The Clean Note Policy was introduced on November 8, 2016 and is still impacting the Indian economy. It has successfully reduced counterfeit currency, but some implementation issues need to be addressed.

**க்ளீன் நோட் பாலிசி**

- கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக க்ளீன் நோட் பாலிசி அறிமுகப்படுத்தப்பட்டது. அனைத்து ரூபாய் நோட்டுகளும் சுத்தமாகவும் புதியதாகவும் இருக்க வேண்டும், அதாவது, கிழிந்த நோட்டுகளோ அல்லது

EVA STALIN IAS ACADEMY

அதில் எழுதப்பட்டவைகளோ இருக்கக்கூடாது என்று கொள்கை கூறுகிறது.

**அறிமுகம்:**

**சுத்தமான குறிப்பு கொள்கை என்றால் என்ன?**

- இந்திய ரிசர்வ் வங்கி 1988 இல் சுத்தமான நோட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. நாட்டில் கள்ள நோட்டுப் புழக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக் கொள்கையானது இந்தியப் பொருளாதாரத்தில் நம்பமுடியாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, ஏனெனில் இது மக்கள் தங்கள் பழைய நோட்டுகளை டெபாசிட் செய்யவும், புதிய நோட்டுகளை திரும்பப் பெறவும் கட்டாயப்படுத்தியுள்ளது. இதனால் சந்தையில் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டு, ரியல் எஸ்டேட், சில்லறை வர்த்தகம், சுற்றுலா என பல துறைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
- RBI Clean Note கொள்கை இந்தியாவில் கள்ள நோட்டுகளின் புழக்கத்தை திறம்பட குறைத்துள்ளது. இருப்பினும், சுத்தமான நோட்டுகளை எளிதில் அணுக முடியாத ஏழை மற்றும் கிராமப்புற மக்கள் மீது அதன் எதிர்மறையான தாக்கத்திற்காக இது விமர்சிக்கப்பட்டது.

**Clean Note கொள்கை எவ்வாறு செயல்படுகிறது?**

- சுத்தமான நோட்டுக் கொள்கை என்பது இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) பணத்தாள்களை சுத்தமாகவும் பயன்படுத்தக்கூடியதாகவும் வைத்திருக்கும் முயற்சியாகும்.
- ரிசர்வ் வங்கி சட்டம் 1934 பிரிவு 27 கூறுகிறது, "எந்தவொரு நபரும், ரூபாய் நோட்டுகளை வைத்திருக்கும் அல்லது கையாளும் எந்த வளாகத்திலும், எந்த ஒரு ரூபாய் நோட்டையும் மண்ணாக்கவோ, சிதைக்கவோ அல்லது அழிக்கவோ கூடாது."
- சுத்தமான நோட்டுக் கொள்கையானது, புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளை சுத்தமாகவும் பயன்படுத்தக்கூடியதாகவும் வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது முதலில் 1996 இல் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் 2003 இல் திருத்தப்பட்டது.

EVA STALIN IAS ACADEMY

- ரிசர்வ் வங்கி கொள்கையை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வங்கிகளுக்கு வழங்கி வருகிறது. மூன்று வகை நோட்டுகளை வரிசைப்படுத்த வங்கிகள் மூன்று அடுக்கு முறையைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளன: அழுக்கடைந்த நோட்டுகள், காகிதக் கூழ் தயாரிக்கப் பயன்படுத்தலாம்; அழுக்கு குறிப்புகள், குறைந்த தரம் கொண்ட காகித பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது; மற்றும் பொருத்தமான குறிப்புகள், இது உயர்தர காகித தயாரிப்புகளை தயாரிக்க பயன்படுகிறது.

**முந்தைய க்ளீன் நோட் பாலிசிகளில் இருந்து இதை வேறுபடுத்துவது என்ன?**

- டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளை பாதுகாப்பானதாக மாற்றும் ரிசர்வ் வங்கியின் முயற்சிகளின் ஒரு பகுதியே புதிய சுத்தமான நோட்டுக் கொள்கை.
- இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகளை பாதுகாப்பானதாக மாற்றுவதற்கான அதன் முயற்சிகளின் ஒரு பகுதியாக புதிய சுத்தமான நோட்டுக் கொள்கையை வெளியிட்டுள்ளது. அனைத்து பங்குதாரர்களுடனும் சமீபத்தில் நடந்த கூட்டத்தில் புதிய சுத்தமான நோட்டுக் கொள்கை அறிவிக்கப்பட்டது.
- புதிய சுத்தமான நோட்டுக் கொள்கையானது அக்டோபர் 1, 2018 முதல் நடைமுறைக்கு வரும், மேலும் டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு அல்லது நெட் பேங்கிங் மூலம் ஏதேனும் வங்கிக் கிளை அல்லது ஏடிஎம்மில் வாங்குதல் அல்லது பணம் எடுப்பதற்கு வாடிக்கையாளர் பணம் செலுத்தும் தேதியிலிருந்து இது நடைமுறைக்கு வரும். வசதி.
- **RBI Clean Note கொள்கை இந்தியாவின் பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கும்?**
- இந்திய அரசு பணப் பரிவர்த்தனைகள் குறித்த நிலைப்பாட்டை எடுத்து, புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவைக் குறைக்க புதிய கொள்கையை அமல்படுத்தி வருகிறது. இது இந்தியாவின் செயல்பாடுகளில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவரும்.
- ரொக்கப் பரிவர்த்தனையை மக்கள் பயன்படுத்துவதைத் தடுக்க ரிசர்வ் வங்கி புதிய கொள்கையை அமல்படுத்தியுள்ளது. RBI Clean Note கொள்கை மார்ச் 1, 2017 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

EVA STALIN IAS ACADEMY

- இக்கொள்கையானது இந்தியாவை ரொக்கமில்லா சமூகமாக மாற்றுவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாக இருக்கும், அங்கு பணப்பரிவர்த்தனையை விட டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இது டிஜிட்டல் பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதால் நாட்டின் மீது பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும், இது காகித பணத்திற்கான குறைந்த தேவையை குறிக்கும். இந்த கொள்கையின் நோக்கம் உண்மையான நாணயத்தை வைத்திருப்பவர்கள் அதை டெபாசிட் செய்து சுத்தமான நோட்டை திரும்பப் பெறுவதை உறுதி செய்வதாகும். இந்திய ரிசர்வ் வங்கி முக மதிப்பின் மையத்தில் 'ஆர்பிஐ' என்ற இன்செட் எழுத்துடன் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. வங்கிகள் மூலம் பெறப்படும் நோட்டுகள் உண்மையானவை என்பதை உறுதி செய்வதற்காக இது செய்யப்படுகிறது.

**பிராந்தியப் பொருளாதாரங்களில் சுத்தமான குறிப்புக் கொள்கையின் தாக்கம்**

- இந்த க்ளீன் நோட் கொள்கையை நடைமுறைப்படுத்துவது பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவுக்கு வழிவகுக்கும் மற்றும் பணவீக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும். இந்திய ரிசர்வ் வங்கி (RBI) சில காலமாக புழக்கத்தில் உள்ள பணத்தை கட்டுப்படுத்த முயற்சித்து வருகிறது. நவம்பர் 2016 இல், புழக்கத்தில் இருந்த இரண்டு மதிப்புமிக்க ரூபாய் நோட்டுகளான ரூ 500 மற்றும் ரூ 1,000 நோட்டுகளை அது அகற்றியது - இது பொருளாதார வளர்ச்சியில் மந்தநிலைக்கு வழிவகுத்தது. இப்போது, இந்த சுத்தமான குறிப்புக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், பொருளாதார வளர்ச்சியில் இன்னும் குறிப்பிடத்தக்க மந்தநிலை மற்றும் பணவீக்கமும் அதிகரிக்கும். குறுகிய காலத்தில், வரி வசூலை அதிகரிப்பதன் அடிப்படையில் இந்த கொள்கை அரசாங்கத்திற்கு சில நன்மைகளை ஏற்படுத்தக்கூடும். இருப்பினும், இது நீண்ட காலத்திற்கு பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும் மற்றும் பணவீக்கத்தை ஏற்படுத்தும்.

EVA STALIN IAS ACADEMY

**முடிவுரை**

- கருப்புப் பணம அல்லது நிழல் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கியின் சுத்தமான நோட்டுக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. முறைமையில் போலி நாணயத் தாள்களைக் குறைப்பதற்கும் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கும் இந்த நடைமுறை முன்வைக்கப்பட்டது.
- சுத்தமான நோட்டுக் கொள்கை நவம்பர் 8, 2016 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது, அது இன்னும் இந்தியப் பொருளாதாரத்தை பாதித்து வருகிறது. இது போலி நாணயத்தை வெற்றிகரமாக குறைத்துள்ளது, ஆனால் செயல்படுத்துவதில் சில சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும்.

EVA STALIN IAS ACADEMY

# ஜப்பானில் ஜி-7 உச்சி மாநாடு: ரஷ்யா மீது கூடுதல் தடை விதிக்க வாய்ப்பு



**டோக்கியோ:** ஜப்பானில் நடக்கும் ஜி 7 உச்சி மாநாட்டில் உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் மீது கூடுதல் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஜி 7 கூட்டமைப்பு நாடுகளின் உச்சி மாநாடு ஜப்பானின் ஹிரோஷிமாவில் மே 19 - 21 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், ஜெர்மனி உட்பட உலக நாடுகளின் தலைவர்கள் ஜப்பான் சென்றுள்ளனர்.

முதல் நிகழ்வாக, ஹிரோஷிமாவில் உள்ள நினைவரங்க பூங்காவில் உலக நாடுகளின் தலைவர்களை ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா வரவேற்றார். பின்னர் இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா வீசிய அணுகுண்டால் பெரும் பேரழிவை சந்தித்த மக்களின் நினைவாக ஹிரோஷிமாவில் உள்ள நினைவரங்கில் உலக நாடுகளின் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

EVA STALIN IAS

ஜி 7 உச்சி மாநாட்டில், முக்கிய நிகழ்வாக வரும் ஞாயிற்றுக்கிழமை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி நேரடியாக கலந்து கொள்கிறார். இதனை உக்ரைன் அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

ஜெலன்ஸ்கி கலந்து கொள்வதன் மூலம், ஜி 7 உச்சி மாநாட்டில் ரஷ்யா மீது கூடுதல் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் பாதுகாப்பு பணிகளுக்காக சுமார் 1000 போலீஸார் ஹிரோஷிமாவில் களம் இறங்கி உள்ளனர். இதற்கிடையே அணுஆயுத போர்கள் வேண்டாம் என்றும் , காலநிலை மாற்றத்துக்கு எதிராக உலக நாடுகளின் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டும் என்றும் சூழலியல் ஆர்வலர்கள் வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

EVA STALIN IAS ACADEMY